1967, மார்ச் 29

சாத்தனூர் தலைக்கால்வாய் உடைப்பும், தண்டராம்பட்டு தொகுதியில் பயிர்ப் பாதிப்பும்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சகாதேவ கவுண்டர் அவர்கள் சட்டசபை விதிகளின் 41-வது விதியின்கீழ் தாம் கொடுத்துள்ள அவசர்ப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவகளுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கே. சகாதேவ கவுண்டர்: அவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் அணைக்கட்டின் தலைக் கால்வாய் உடைந்து விட்டதால் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்துள்ள நஞ்சை, புஞ்சைப் பயிர்கள் வாடி வதங்கி யுள்ளன. இதனைத் தடுக்க உடனடியாகச் செய்ய வேண்டிய நிவாரண வேலைகள் பற்றிய அவசாப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: அவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் தலைக்கால்வாயில் விடப்பட்ட நீரளவு தேவைக்கேற்ப அதிகரிக்கப்பட்டது. 17—3—1967 அன்று காலை 6 மணி அளவில் அக்கால்வாயில் 1 மைல் 7 பர்லாங்கு தொலைவில் 20 அடி உயர்முள்ள கரையில் வலது பாகத்தில் 50 அடி நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டது. உடைப்பினை மூடிட உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது. 21-3-1967 அன்று தலைமைப் பொறியாளர் உடைப்பு ஏற்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டு, பழுது பார்க்கும் பணி திருப்திகரமாக நடைபெற்று வருகிறதென அறிந்தார். இவ்வேலை 26-3-1967 அன்று முடிவடைந்தது, பாசன நீர் கட்டுப்படுத்திய அளவில் வழங்கப்பட்டு வருகிறது. கரை மேலும் வலுவடைவதுடன் நீர் வழங்கல் படிப்படியாக அதிகரிக்கப்படும். கிடைத்த தகவலின்படி பாசனம் பெறும் நஞ்சை நிலம் 7,431 ஏக் கரும், புஞ்சை 13,148 ஏக்கரும் ஆகும். புஞ்சைப் பயிர் பெரும் பாலும் அறுவடை ஆகிவிட்டது. இந்த உடைப்பினுல், தற்போது பயிரிடப்பட்ட நிலங்கள் ஒன்றும் சேதமடையவில்லை. அண்மை யில் பெய்த மழை அப்பயிர்களுக்குப் பெரிதும் உதவியுள்ளது. இப்போதைய ஆணைக்கிணங்க 30-4-1967 வரை வினியோகம் நீடிக்கும். ஆயினும் தேவையிருப்பின், அதன்பின்னரும் போதிய காலத்திற்கு வினியோகம் நீடிக்கப்பெறும்.

6. அறிவிப்புகள்.

(அ) உள் சட்ட ஆய்வுக் குழுவினர் நியமனம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, இந்தப் பேரவைக் குத் தரிவிக்கவேண்டிய ஓர் அறிவிப்பு உள்ளது. இந்தப் பேரவை யின் 209 (1) வது விதிக்கு இணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை

[மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 29

நான், உள் சட்ட ஆய்வுக் குழுவின் (கமிட்டி ஆன் சபார்டினேட் லெஜிஸ்லேஷன்) உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

(1) திரு. ஆர். என். அரங்கநாதன்.
(2) திரு. நா. கிருட்டினன்.
(3) திரு. கே. ஆர். கோவிந்தன்.
(4) திரு. பழனிவேல் ராஜன்.
(5) திரு. க. ந. சிவபெருமாள்.
(6) திரு. து. ப. அழகமுத்து.
(7) திரு. கே. விநயகம்.
(8) திரு. டி. மார்டின்.
(9) திரு. கே. போஜன்.
(10) திரு. என். சங்கரய்யா.

இப்பேரவையின் 202-வது விதிக்கு இணங்க திரு. ஆர். என். அரங்கநாதன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

7. கவர்னர் பேருரையின்மீது விவாதம் (தொடர்ச்சி).

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: இப்பேரவையின் அடுத்த அலுவல், கவர்னர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும். இப்பொழுது இந்த அவையின் கூட்டம் 1 மணிவரை நடைபெற்று, இடைவேளைக்குப்பின் மீண்டும் இன்று மாலை 2-30 மணிக்குத் தொடங்கும். நேற்றுப் பேசத் தொடங்கி, உரையை முடிக்காமலேயே விட்டுவிட்ட திரு. செ. கோ. விசுவ நாதன் அவர்கள் இப்பொழுது தொடர்ந்து உரையாற்றுவார்கள்.

திரு. செ. கோ. விசுவநாதன்: தலைவரவர்களே, கவர்னர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நேற்று நான் பேசிய கருத்துக்களைத் தொடர்ந்து சில கருத்துக்களை இன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அண்மையிலே சில மாதங்களுக்கு முன்பாக ஏற்பட்ட புயலின் காரணமாக செங்கற் பட்டு மாவட்டத்திலே இரண்டு கோடி ரூபாய்க்கு மேலாக நஷ்டம் ஏற்பட்டு அங்கேயுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விவசாயிகளுடைய தோட் டங்களிலேயுள்ள தென்னைகளும், வாழை மரங்களும் அழிக்கப் பட்ட காரணத்தாலே, அவர்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அளித்திருக்கின்ற கடன்களையும், கூட்டுறவுச் சங்கங்கள் அளித்திருக்கின்ற கடன்களையும் மிகத் துரிதமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே புயலால் பாதிக்கப்பட்ட எங்கள் மாவட்டத்தில் இவற்றை வசூலிப்பதைக் கொஞ்சம் தள்ளிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அணு மின்சார நிலையத்தைத் தொடங்குவதற்காக அங்கே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான்கு ஐந்து கிராமங்களிலுள்ள நிலங்களைச் சர்க்கார் வாங்கி